# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2351- 2023 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.09.22

*2351 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 264 |
| நானாவித அறிவித்தல்கள் | 265 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


263 - B 082497- 353 (2023/09)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## அறிவித்தல்

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்

கம்பஹா மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. ஹேவா பதிரன்னலாகே விஜயாநந்த அவர்கள் 2022.11.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
2023.08.29.

09-409

---

## அறிவித்தல்

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்

களுத்துறை மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. ஜீ.ஏ.ஜீ.எஸ்.கலபட ஆரச்சி அவர்கள் 2023.01.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
2023.08.29.

09-410

---

## அறிவித்தல்

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்

கேகாலை மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. விஜயதிலககே பியதாச விக்கிரமபால அவர்கள் 2023.02.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
2023.08.29.

09-411

**அறிவித்தல்**

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்*

*கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. எச்.எஸ்.பீ. பெரேரா அவர்கள் 2023.01.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*கே.டீ.என். ரஞ்சித் அசோக,*
*செயலாளர்.*

*பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
*கொழும்பு,*
*2023.08.29.*

*09-412*

---

**அறிவித்தல்**

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டம்*

*கண்டி மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. இலங்கதிலக்க முதியன்சேலாகே தயாரத்ன பண்டா அவர்கள் 2023.02.28 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*கே.டீ.என். ரஞ்சித் அசோக,*
*செயலாளர்.*

*பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்*
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
*கொழும்பு,*
*2023.08.29.*

*09-413*

---

# *நானாவித அறிவித்தல்கள்*

## கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றம் குடியியல் நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

*சகிட்டேரியஸ் டிஜிட்டல் இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் பற்றிய விடயத்தில்,*
*லெவல் 6, லோவர் ப்ளொக், உலக வர்த்தக மையம்,*
*கொழும்பு -01.*

*வழக்கு இலக்கம்: CHC/ 57/ 2023/ CO*
*தன்மை: கலைப்பு*
*நடைமுறை : சுருக்கம்*

*மற்றும்*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ்*
*XII ஆம் பிரிவின் கம்பனிகளைக் கலைப்புச் செய்தல் தொடர்பான விதிகளின் கீழ் பின்வரும் நிறுவனத்தை கலைப்புச் செய்தல் பற்றியது,*

*சகிட்டேரியஸ் டிஜிட்டல் இன்ஜினியரிங் ( பிறைவட்) லிமிடட் பற்றிய விடயத்தில்,*
*லெவல் 6, லோவர் ப்ளொக், உலக வர்த்தக மையம்,*
*கொழும்பு -01.*

*மனுதாரர்*

*மேற்குறிப்பிடப்பட்ட பெயர் தரித்த நிறுவனத்தினை கலைப்புச் செய்தல் தொடர்பாக கொழும்பில் உள்ள குடியியல் நியாயாதிக்க அதிகாரத்தினை உடைய மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது என்பதுடன், இது பற்றிய விசாரணை குறித்த நீதிமன்றத்தால் மேற்குறிப்பிடப்பட்ட பெயரையுடைய மனுதாரரால் 2023, ஓகத்து மாதம் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது என்பதுடன் குறித்த அம்மனு 2023, திசெம்பர் 07 ஆந்திகதியன்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படுவதென வழிப்படுத்துவதென்பதுடன் குறித்த அம்மனு தொடர்பில் இடப்படும் கட்டளைக்கெதிராகவோ சார்பாகவோ குறித்த அக்கம்பனியின் எந்தவொரு கடன் தருநரோ உதவித்தொகை செலுத்துநரோ தனிநபர் விசாரணையின் போது அவரது சட்டத்தரணியுடனோ அல்லது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ விசாரணை நடைபெறும் நேரத்தில் சமுகமளிக்க வேண்டும், என்பதுடன் இதே நோக்கத்திற்காக மனுவொன்றின் பிரதியானது குறித்த அக்கம்பனியின் யாதாயினும்மோர் கடன் தருநருக்கோ உதவித்தொகை செலுத்துநருக்கோ அளிக்கப்படும் என்பதுடன் அதற்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தினால் கையொப்பமிடுபவரிடமும் அது கோரப்படும்.*

*ஜோன் வில்சன்,*
*ஜோன் வில்சன் பார்ட்னர்ஸ்,*
*மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,*
*365, டாம்ஸ்ட்ரீட், கொழும்பு -12, இலங்கை.*

***குறிப்பு**: குறித்த மனு தொடர்பான விசாரணைக்குத் தோற்ற விரும்பும் எவரும் சட்டப்படி நடப்பதற்குரிய கடப்பாட்டையுடையவராய் இருக்க வேண்டும் அல்லது அது தொடர்பில் மேற்குறிப்பிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிக்கு அத்தகைய அவரது நோக்கம் தொடர்பில் எழுத்து மூல அறிவிப்பினை அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். அந்த அறிவிப்பானது குறித்த நபரின் பெயர் மற்றும் முகவரியினை குறிப்பிட வேண்டும் என்பதுடன் சட்ட நிறுவனத்தின் முகவரியினையும் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அந் நபராலோ அச்சட்ட நிறுவனத்தினாலோ அல்லது அவரின் சட்டத்தரணியினாலோ அது கையொப்பமிடப்படவும் வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான சட்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் அல்லது அது அஞ்சலில் அனுப்பப்படவும் வேண்டும். அவ்வாறு அஞ்சலில் அனுப்பப்படும் போது மேற்குறிப்பிட்ட சட்டத்தரணியை அடைவதற்கேற்றவாறு போதிய கால நேரத்துக்குள் அனுப்பப்படவும் வேண்டும் என்ற வகையில் அது 2023, திசெம்பர் 04 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்பு அனுப்பப்படல் வேண்டும்.*

*09- 331*